# நமது தின கனி

காலை நாளிதழ்

NAMADHU DHINA KANI Daily Morning

| Vol: 01 | Issue: 247 | 4 Pages | 10.4.2024 | Wednesday | Price Rs. 6 | Annual Subscription Rs: 1825 | Tiruppur |
|---|---|---|---|---|---|---|---|
| மலர்: 01 | இதழ்: 247 | 4 பக்கங்கள் | 10.4.2024 | புதன்கிழமை | விலை ரூ.6 | வருட சந்தா ரூ.1825 | திருப்பூர் |


## பா.ஜ.க.வுக்கு அளிக்கிற வாக்கு தமிழ்நாடு எதிரிகளுக்கு அளிக்கும் வாக்கு: முதல்வர் பேச்சு

மதுரை, ஏப். 10

தமிழ்நாட்டை வஞ்சித்துவிட்டு இப்போது எந்த முகத்துடன் பிரதமர் மோடி இங்கு வந்திருக்கிறார். தமிழ்நாட்டுக்கு எந்த நலத்திட்டங்களை வழங்கிவிட்டு ஓட்டு கேட்க வந்திருக்கிறார்? என்று மதுரையில் பிரசாரம் மேற்கொண்ட ஸ்டாலின் மோடியை விமர்சித்து பேசினார்.

மதுரையில் முதல்வர் ஸ்டாலின் பிரசாரம் மேற்கொண்டார். அப்போது அவர் கூறியதாவது: நீதி தவறிய மன்னனை கண்ணகி கேள்வி கேட்ட மதுரை மண்ணுக்கு வந்துள்ளேன். தற்போதைய பிரதமர் மோடி எதிர்க்கட்சிகள் ஆளும் மாநிலங்களை வஞ்சிக்கிறார். மராட்டியத்தில் குதிரை பேரம் நடத்தி ஆட்சியை கவிழ்த்துவிட்டு அந்த மாநிலத்தையே நாசமாக்கி விட்டார்.

எதிர்க்கட்சிகள் ஆளும் மாநிலத்தில் மட்டும் வருமான வரி, அமலாக்கத்துறை சோதனை நடக்கிறது. ஆளுநர்களை வைத்து தொல்லை கொடுப்பது தான் மோடியின் ஆட்சி. பிரதமர் மோடிக்கு ஊழலை ஒழிக்கும் எண்ணம் இல்லை. பெண் சக்தி குறித்து மோடி பேசி வருகிறார். டெல்லியில்



மல்யுத்த வீராங்கனைகள் கண்ணீர் விட்ட போது மோடி எங்கே போனார்?.. குஜராத்தில் பாலியல் வன்கொடுமையால் பாதிக்கப்பட்ட பில்கிஸ் பானோ வழக்கில் குற்றவாளிகளை விடுதலை செய்தது பாஜக அரசு.

பெண்களுக்கு எதிரான குற்றங்கள் அனைத்தையும் வேடிக்கை பார்ப்பவர் தான் மோடி. மணிப்பூரில் பெண்களுக்கு எதிராக அநீதி நடக்கும் போது பிரதமர் மோடி வேடிக்கை பார்த்தார். ஒரு முறையாவது மணிப்பூர் சென்று அங்கு பாதிக்கப்பட்ட பெண்களுக்கு பிரதமர் மோடி ஆறுதல் கூறினாரா?... பிரதமர் மோடியை தமிழ்நாட்டு மக்கள் ஏற்க மாட்டார்கள் என்பது ஜூன் 4 ஆம் தேதி தெரியும். தமிழ்நாட்டுக்காக அறிவிக்கப்பட்ட பல திட்டங்களை முடக்கி போட்டவர் தான் பிரதமர் மோடி. இதுவரை தமிழ்நாட்டுக்கு பிரதமர் மோடி செய்தது என்ன என்று மோடியால் பட்டியல் போட்டு சொல்ல முடியுமா?.. தமிழ்நாட்டு மக்கள் மீது ஏன் உங்களுக்கு வன்மம்.

தமிழ்நாடு மக்கள் மீது ஏன் உங்களுக்கு ஓரவஞ்சனை?... பேரிடர் நிதி கூட கொடுக்கவில்லை. வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிதி வழங்க உங்களிடம் கேட்டால் அதை கூட பிச்சை என கொச்சைப்படுத்துகிறார் நிர்மலா சீதாராமன். இப்படி தமிழ்நாட்டை வஞ்சித்துவிட்டு இப்போது எந்த முகத்துடன் பிரதமர் மோடி இங்கு வந்திருக்கிறார்.

தமிழ்நாட்டுக்கு எந்த நலத்திட்டங்களை வழங்கிவிட்டு ஓட்டு கேட்க வந்திருக்கிறார்?... பாஜக அரசு நம் நாட்டை 100 ஆண்டுகளுக்கு பின்னோக்கி இழுத்து சென்றுவிட்டது. பெட்ரோல் டீசல் விலையை ஒரே அடியாக உயர்த்திவிட்டார்.

தமிழ்நாட்டை வஞ்சித்த பாஜக, தமிழ்நாட்டை பாழ்படுத்திய அதிமுக இரண்டையும் ஒரு சேர வீழ்த்த வேண்டும்.

பாஜகவுக்கு அளிக்கிற வாக்கு தமிழ்நாடு எதிரிகளுக்கு அளிக்கின்ற வாக்கு. அதிமுகவிற்கு அளிக்கின்ற வாக்கு துரோகிகளுக்கு அளிக்கின்ற வாக்கு. எனவே திமுக, திமுக கூட்டணி கட்சிகளுக்கு வாக்கு அளியுங்கள்.

இவ்வாறு அவர் கூறினார்.

## திருநெல்வேலி மக்களவை பொதுத்தேர்தலில் 100 சதவீதம் வாக்களிப்பதன் அவசியம் குறித்து அஞ்சலக பணியாளர்கள் விழிப்புணர்வு பேரணி

நெல்லை, ஏப். 10

38 திருநெல்வேலி மக் களவை பொதுத்தேர்தல் 2024 நடைபெறுவதையொட்டி, 100 சதவீதம் வாக்களிப்பதன் அவசியம் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில், பாளையங்கோட்டை தலைமை அஞ்சலகத்திலிருந்து அஞ்சலக பணியாளர்கள் பங்கேற்ற விழிப்புணர்வு பேரணியை உதவி தேர்தல் நடத்தும் அலுவலர் / திருநெல்வேலி மாநகராட்சி ஆணையாளர் தாக்கரே சுபம் ஞானதேவ்ராவ் முதுநிலை அஞ்சலக கோட்ட கண்காணிப்பாளர் .பு. செந்தில்குமார் முன்னிலையில் தொடங்கி வைத்தார்கள்.

38 திருநெல்வேலி மக்களவை பொதுத் தேர்தல் 2024 நடைபெறுவதையொட்டி, திருநெல் வேலி மாவட்டத்தில் உள்ள அனைத்து சட்டமன்ற தொகுதிகளிலும் 100 சதவீதம் வாக்களிப்பதன் அவசியம் குறித்து பல்வேறு விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டு வருகிறது. மேலும், அனைத்து வாக்காளர்களும் ஜனநாயக கடமையாற்ற வாக்களிக்க வலியுறுத்தி தேர்தல் நடத்தும் அலுவலர்/மாவட்ட கலெக்டர் கா.ப.கார்த்திகேயன், உத்தரவின் பேரில் பல்வேறு விழிப்புணர்வு நிகழ்ச்சிகள், பேரணிகள், கலை நிகழ்ச்சிகள், முதல் தலைமுறை வாக்காளர்களுக்கு பல்வேறு போட்டிகள் உள்ளிட்ட பல்வேறு விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டு வருகிறது.

அதன் ஒரு பகுதியாக, இன்று அஞ்சலக பணியாளர்கள் மூலம் தேர்தல் விழிப்புணர்வு பேரணி நடத்தப்பட்டது. இப்பேரணி தலைமை அஞ்சலகத்திலிருந்து தொடங்கி பெருமாள் கீழ ரத வீதி, வடக்கு ரத வீதி, மேலரத வீதி மற்றும் தெற்கு பஜார் வழியாக மீண்டும் தபால் நிலையம் வரை நடைபெற்றது. விழிப்புணர்வு பேரணியில் ஊழியர்கள் நேர்மையாக வாக்களிக்கவும், ஜனநாயக கடமையாற்றவும் 100 சதவீதம் வாக்களிப்போம் என விழிப்புணர்வு ஏற்படுத்தி உறுதிமொழி எடுத்துக்கொண்டனர்.



இந்திய அஞ்சல் துறை இந்திய தேர்தல் ஆணையத்துடன் மேற்கொண்டுள்ள புரிந்துணர்வு ஒப்பந்தம்படி முறையான வாக்காளர் கல்வி மற்றும் தேர்தல் பங்கேற்பு பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தும் விதமாக வாக்காளர்கள் அனைவரும் தவறாது மக்களவை தேர்தல் 2024 யில் வாக்களிக்கவும் மேலும் வாக்களிப்பது ஒவ்வொரு இந்தியக் குடிமகனின் கடமை மற்றும் உரிமை என்பதை விளக்கும் வகையில் இப்பேரணி அமைந்திருந்தது.

இப்பேரணியில் உதவி கோட்ட அஞ்சலக கண்காணிப்பாளர்கள் சு..பாலாஜி, ஆ.குமரன், மு.சண்முகபிரியா, தலைமை அஞ்சலக அதிகாரிகள் ராமச்சந்திரன், சு.விக்டோரியா,பேரிடர் மேலாண்மை வட்டாட்சியர் செல்வம் அவர்கள், கனகசபாபதி உட்பட 300க்கும் மேற்பட்ட அஞ்சல் ஊழியர்கள் கலந்து கொண்டார்கள்.






## அமெரிக்கா, கனடா, மெக்சிகோவில் முழு சூரிய கிரகணம் தெரிந்தது



வாஷிங்டன், ஏப். 10


சூரியனுக்கும் பூமிக்கும் இடையே நேர்கோட்டு புள்ளியாக சந்திரன் வரும். அப்போது சூரியனை சந்திரன் மறைப்பதால் கிரகணம் நிகழ்கிறது. இந்த ஆண்டு முதல் சூரிய கிரகணம் என கூறப்படுகிறது.

இந்தியா உள்பட பெரும்பாலான ஆசிய நாடுகளில் இந்த கிரகணத்தைப் பார்க்கமுடியாது. அமெரிக்கா, கனடா, மெக்சிகோ மற்றும் வட அமெரிக்க நாடுகளில் சூரிய கிரணக்கத்தை பார்க்கலாம் என தெரிவிக்கப்பட்டு இருந்தது.

இந்நிலையில், முழு சூரிய கிரகணம் அமெரிக்காவில் தெரிந்தது. இந்த நிகழ்வை டல்லாஸ், இண்டியானாபோலிஸ், கிளீவ்லேண்ட் மற்றும் நியூயார்க்கின் பஃபலோ ஆகிய நகர மக்கள் கண்டு களித்தனர். மேலும் கனடா, மெக்சிகோவிலும் சூரிய கிரகணம் தெரிந்தது. இதுதொடர்பான புகைப்படங்களை நாசா வெளியிட்டுள்ளது.

## பாலின மாற்று அறுவை சிகிச்சை, வாடகை தாய் மனித கண்ணியத்திற்கு பெரும் அச்சுறுத்தல்: வாடிகன்

அமெரிக்கா, ஏப். 10



பாலின மாற்று அறுவை சிகிச்சை மற்றும் வாடகை தாய் மூலம் குழந்தை பெற்றுக் கொள்ளுதல், பாலின கொள்கை மனித கண்ணியத்திற்கு மிகப்பெரிய அச்சுறுத்தல் என வாடிகன் தெரிவித்துள்ளது. மேலும், கருக்கலைப்பு மற்றும் கருணைக்கொலை ஆகியவை என அனைத்தும் மனித வாழ்க்கைகான கடவுளின் கொள்கையை மீறுவதாகும். கடந்த ஐந்து மாதங்களாக பல்வேறு திருத்தங்களை மேற்கொண்டு, போப் பிரான்சிஸ் ஒப்புதலுடன் கண்ணியம் தொடர்பாக 20 பக்கம் கொண்ட கண்ணியம் தொடர்பானஅறிவிப்பைவாடிகனின்கோட்டுபாடுஅலுவலகம்வெளியிட்டுள்ளது. பாலின கோட்பாடு அல்லது ஒரு பாலினத்தை சேர்ந்தவர் இன்னொரு பாலினத்தை சேர்ந்தவராக மாற முடியும் என்பதை தொடர்ந்து கடுமையாக நிராகரித்து வருகிறது. கடவுள் ஆணையும் பெண்ணையும் உயிரியல் ரீதியாக வேறுபட்ட, தனித்தனியான உயிரினங்களாகப் படைத்தார். அதை மாற்ற முயற்சிக்கக் கூடாது அல்லது தன்னைக் கடவுளாக்க முயற்சிக்கக்கூடாது என அதில் குறிப்பிடப்பட்டுள்ளது. எந்தவொரு பாலின மாற்ற தலையீடு, விதிப்படி கருத்தரித்த தருணத்திலிருந்து நபர் பெற்ற தனித்துவமான கண்ணியத்தை அச்சுறுத்துகிறது.

## வெளியேறிய இஸ்ரேல் ராணுவம்: அடையாளம் தெரியாத வகையில் சிதைந்து போனதாக கான் யூனிஸ் மக்கள் வேதனை

பாலஸ்தீன், ஏப். 10

ஹமாஸ் அமைப்பினரை குறிவைத்து இஸ்ரேல் ராணுவம் காசா மீது தாக்குதல் நடத்தியது. காசா முனையின் வடக்குப் பகுதியில் தாக்குதலை தொடங்கிய இஸ்ரேல் படிப்படியாக தெற்குப் பகுதியிலும் தாக்குதல் நடத்த தொடங்கியது.

பாலஸ்தீன மக்கள் அதிக அளவில் வசித்து வந்த கான் யூனிஸ் நகர் மீது கடந்த டிசம்பர் மாதம் தாக்குதல் நடத்த தொடங்கியது. அமெரிக்கா உள்ளிட்ட பல்வேறு நாடுகள் எதிர்ப்பு தெரிவித்த போதிலும், கான் யூனிஸ் மீது தாக்குதல் நடத்தினால்தான் எங்களது நோக்கம் நிறைவேறும் எனக் கூறியது.

சுமார் நான்குமாதம் கடுமையான வகையில் கான் யூனிஸ் மீது இஸ்ரேல் ராணுவம் தாக்குதல் நடத்தியது. வான்வழியாக தாக்குதல் நடத்திய நிலையில், தெருத்தெருவாக சோதனை நடத்தி ஹமாஸ் அமைப்பினரை தேடினர். ஹமாஸ் அமைப்பினரின் சுரங்கப்பாதைகளை தேடிப்பிடித்து அழித்தனர்.

ஹமாஸ் அமைப்பினரின் ஆதிக்கம் அதிகமாக உள்ள இடமாக கான் யூனிஸ் கருதப்பட்டது. இங்குள்ள வீடுகள், கட்டடங்கள் இஸ்ரேல் ராணுவத்தின் தாக்குதலால் தரைமட்டமாகின.

தற்போது இஸ்ரேல் ரஃபா நகர் மீது தாக்குதல் நடத்த திட்டமிட்டுள்ளது. இந்த நிலையில் உதவிப்பொருட்கள் வழங்கிய நபர்கள் மீது இஸ்ரேல் ராணுவம் தாக்குதல் நடத்தியது. அதில் சிலர் உயிரிழந்தனர். இதனால் அமெரிக்கா தனது கண்டனத்தை வெளிப்படுத்தியது. இஸ்ரேல் ராணுவம் பொதுமக்களை பாதுகாக்க போதுமான நடவடிக்கை எடுக்கவில்லை எனத் தெரிவித்தது.

இந்த நிலையில் யூனிஸ் கான் நகர் மீது தாக்குதல் நடத்தியதற்கான நோக்கம் முடிவடைந்து விட்டது. இதனால் கான் யூனிஸ் நகரில் இருந்து வெளியேறுகிறோம் என இஸ்ரேல் ராணுவம் தெரிவித்துள்ளது.

இதனால் கான் யூனிஸ் நகரில் வசித்த வந்த மக்கள் தங்களுடைய சொந்த நகருக்கு திரும்பிய வண்ணம் உள்ளனர். ஆனால் கான் யூனிஸ் நகர் தனது அடையாளத்தை இழந்துள்ளது. கட்டடங்கள் இருந்த இடம் தெரியாத வகையில் சிதைக்கப்பட்டுள்ளன.

வீடுகள் இருந்த சுவடே தெரியவில்லை என நேரில் சென்று பார்த்த பாலஸ்தீனர்கள் தங்களது வேதனைகளை தெரிவித்துள்ளனர்.

கான் யூனிஸ் நகரில் இருந்து வெளியேறிய முகமது அப்தெல்கானி தற்போது கான் யூனிஸ் நகர் திரும்பியுள்ளார். அவர் "பல பகுதிகள் குறிப்பாக நகரின் மையப் பகுதிகள் மக்கள் வாழ்வதற்கு தகுதியற்ற இடமாக மாறியுள்ளது. என்னுடைய வீடு மற்றும் என்னுடைய வீடு அருகில் இருந்த வீடுகள் தரைமட்டமாகியுள்ளன" என வேதனையுடன் தெரிவித்துள்ளார்.

நஜ்வா அயாஷ் என் பெண் "தனனுடைய குடும்பம் வசிக்கும் 3 மாடிக்கு செல்ல முடியவில்லை. ஏனென்றால் படிகள் அனைத்தும் இடிந்துள்ளன" எனத்தெரிவித்துள்ளார். பாசல் அபு சாசர் "அவர்கள் (இஸ்ரேல் ராணுவம்) எதையும விட்டுச் செல்லவில்லை. வாழ்வதற்கான ஏதும் இல்லை" எனத் தெரிவித்துள்ளார்.

# வேட்பாளர்களின் தேர்தல் செலவினங்கள் கண்காணித்தல் மற்றும் தேர்தல் விதிமீறல் தொடர்பாக எடுக்கப்பட்டு வரும் நடவடிக்கைகள் குறித்து ஆலோசனை கூட்டம்




பெரம்பலூர், ஏப். 10

பாராளுமன்ற பொதுத் தேர்தலை முன்னிட்டு வேட்பாளர்களின் தேர்தல் செலவினங்கள் கண்காணித்தல் மற்றும் தேர்தல் விதிமீறல் தொடர்பாக எடுக்கப்பட்டு வரும் நடவடிக்கைகள் குறித்து இந்திய தேர்தல் ஆணையத்தால் மாநில அளவிலான தேர்தல் சிறப்பு செலவினப் பார்வையாளராக நியமிக்கப்பட்டுள்ள பி.ஆர். பாலகிருஷ்ணன் தலைமையில் மாவட்ட கலெக்டர்/மாவட்ட தேர்தல் அலுவலர் க.கற்பகம் முன்னிலையில் மாவட்ட கலெக்டர் அலுவலக கூட்ட அரங்கில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் பெரம்பலூர் பாராளுமன்றத் தொகுதிக்கான தேர்தல் செலவினப் பார்வையாளர் வி.ஆர்.ஹரி ஐ.ஆர்.எஸ் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் ஷ்யாம்ளா தேவி ஆகியோர் கலந்துகொண்டனர்.

இக்கூட்டத்தில், பாராளுமன்ற பொதுத் தேர்தலில் பெரம்பலூர் பராளுமன்ற தொகுதியில் போட்டியிடும் வேட்பாளர்களின் தேர்தல் செலவினக் கணக்குகள் கண்காணிக்கப்படும் விதம், கணக்குகள் பராமரிக்கப்படும் விதம் குறித்து மாநில அளவிலான தேர்தல் சிறப்பு செலவினப் பார்வையாளர் பி.ஆர். பாலகிருஷ்ணன் ஐ.ஆர்.எஸ் (ஓய்வு) அவர்கள் விரிவாக கேட்டறிந்தார்.

குறிப்பாக மாவட்டங்களின் எல்லைகளில் உரிய ஆவணங்களின்றி ஏதேனும் பணம், பொருட்கள் கொண்டு செல்லப்படுகிறதா என்பது குறித்து தீவிரமாக கண்காணிக்க வேண்டும் எனவும், மாவட்டத்தில் எங்கேனும் உரிய அனுமதியின்றி அதிகப்படியான மதுபானங்கள் விற்கப்படுகிறதா எனவும் தீவிரமாக கண்காணிக்க வேண்டும் என அறிவுறுத்தினார்.

மேலும், சந்தேகத்திற்குரிய பண பரிவர்த்தனைகள் நடைபெறுகின்றதா என்பது தொடர்ந்து கண்காணிக்கப்பட வேண்டும், ஆன்லைன் மூலம் நடைபெறும் பண பரிவர்த்தனைகளை மிகவும் நுணுக்கமாக கவனிக்க வேண்டும் எனவும் அலுவலர்களுக்கு உத்தரவிட்டார்.

தேர்தல் விதிமீறல் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் என்னென்ன, தேர்தல் கட்டுப்பாட்டு அறைக்கு வரப்பெற்ற புகார்களின் விபரம் மற்றும் அந்த புகார்களின்மீது எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் என்ன என்பது குறித்து விரிவாக கேட்டறிந்த மாநில அளவிலான தேர்தல் செலவினப் பார்வையாளர் அவர்கள், பறக்கும் படை மற்றும் நிலையான கண்காணிப்புக் குழுகுகளில் ஈடுபட்டுள்ள அலுவலர்களின் கண்காணிப்புகளை வரும் காலங்களில் தீவிரப்படுத்த அறிவுறுத்த வேண்டும் என்றும் கேட்டுக்கொண்டார்.

பாராளுமன்ற பொதுத் தேர்தல் நேர்மையாகவும், அமைதியாகவும் நடைபெற அனைத்து அலுவலர்களும் ஒருங்கிணைந்து செயல்பட வேண்டும், என தெரிவித்த மாநில அளவிலான தேர்தல் சிறப்பு செலவினப் பார்வையாளர் அவர்கள் மக்கள் எவ்வித தயக்கமும், அச்சமின்றியும் தங்களது ஜனநாயகக் கடமையினை ஆற்ற வேண்டும் என்றும் கேட்டுக்கொண்டார்.

இக்கூட்டத்தில் மாவட்ட வருவாய் அலுவலர் மு.வடிவேல்பிரபு, சார் ஆட்சியர் சு.கோகுல், ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் அ.லலிதா, மாவட்ட ஆட்சித்தலைவரின் நேர்முக உதவியாளர் வைத்தியநாதன்(பொது), விஜயா (தேர்தல்), தேர்தல் நடத்தை விதிமுறைகள் குறித்த ஒருங்கிணைப்பு அலுவலர் பிரபு ஜெயக்குமார் மோசஸ், தேர்தல் கணக்குகளுக்கான ஒருங்கிணைப்பு அலுவலர் நாகவல்லி, கட்டுப்பாட்டு அறை மற்றும் ஊடக சான்றளிப்பு மற்றும் கண்காணிப்புக்கான ஒருங்கிணைப்பு அலுவலர் சரண்யா உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.

# நுண் பார்வையாளர்களுக்கு கணினி மூலம்தெறிவு முறையில் சட்டமன்ற தொகுதி ஒதுக்கீடு செய்யும் பணிகள்: கலெக்டர் ஆய்வு




அரியலூர், ஏப். 10

அரியலூர் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில், சிதம்பரம் நாடாளுமன்ற தொகுதி 2024, மக்களவைத் தேர்தல் நடைபெறவுள்ளதை முன்னிட்டு நுண் பார்வையாளர்களுக்கு கணினி மூலம் தற்செயல் தெறிவு முறையில் சட்டமன்ற தொகுதி ஒதுக்கீடும் செய்யும் பணி மாவட்ட தேர்தல் அலுவலர் / சிதம்பரம் பாராளுமன்ற தொகுதி தேர்தல் நடத்தும் அலுவலர் ஜா.ஆனி மேரி ஸ்வர்ணா, தலைமையில், சிதம்பரம் (தனி) பாராளுமன்ற தொகுதி தேர்தல் பொதுப்பார்வையாளர் போர் சிங் யாதவ், முன்னிலையில் நடைபெற்றது.

இந்தியத் தேர்தல் ஆணையத்தின் உத்தரவின்படி, சிதம்பரம் பாராளுமன்ற தொகுதி தேர்தல் நடைபெறவுள்ளதை தொடர்ந்து அரியலூர் மாவட்டத்திலுள்ள 149. அரியலூர் சட்டமன்ற தொகுதி மற்றும் 150. ஜெயங்கொண்டம் சட்டமன்ற தொகுதிகுட்பட்ட பதற்றமான வாக்குச்சாவடி மையங்களில் பணியாற்ற உள்ள நுண் பார்வையாளர்களுக்கு கணினி மூலம் தற்செயல் தெறிவு முறையில் தொகுதி ஒதுக்கீடும் செய்யும் பணி நடைபெற்றது. அதன்படி 110 நுண்பார்வையாளர்களுக்கு சட்டமன்ற தொகுதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது, நுண்பார்வையாளர்கள் பதற்றமான வாக்குச்சாவடி மையங்களில் பணியமர்த்தப்பட்டு வாக்குப்பதிவினை கண்காணிப்பார்கள் என மாவட்ட தேர்தல் அலுவலர் / சிதம்பரம் பாராளுமன்ற தொகுதி தேர்தல் நடத்தும் அலுவலர் ஜா.ஆனி மேரி ஸ்வர்ணா தெரிவித்தார்.

இந்நிகழ்வில், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் கங்காதாரிணி, மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (தேர்தல்) சுமதி, மாவட்ட முன்னோடி வங்கி மேலாளர் சங்கர சுப்பரமணியன், தேர்தல் விழிப்புணர்வு அலுவலர் திரு.ராமலிங்கம், மாவட்ட தகவலியல் மைய அலுவலர் ஜான் பிரிட்டோ, வட்டாட்சியர்கள் மற்றும் அரசு அலுவலர்கள் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.

# தஞ்சை பாரத் கல்லூரியில் இப்தார் விருந்து நிகழ்ச்சி



தஞ்சாவூர்,ஏப்.10

தஞ்சை பாரத் கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் மத நல்லிணக்கத்திற்கு எடுத்துக் காட்டாக ஆண்டுதோறும் பொங்கல், கிறிஸ்துமஸ், இப்தார் விருந்து நிகழ்ச்சி போன்றவை கல்லூரி நிறுவனர் கணேசன் வழிகாட்டுதல்படி நடைபெறும். இந்த ஆண்டு இப்தார் நோன்பு திறக்கும் நிகழ்ச்சி மற்றும் விருந்து நடந்தது. நிகழ்ச்சிக்கு கல்வி குழுமத் தலைவர் புனிதா கணேசன் தலைமை தாங்கினார். நிகழ்ச்சியில் பேராசிரியர்கள் அனீஸ் பாத்திமா, நர்கீஸ் ஆகியோர் இப்தார்நோன்பு பற்றி சிறப்புரை ஆற்றினர். மாணவர் அப்துல் வாஹித், பாத்திமா பதுலா, ஹாஜா அலாவுதீன் ஆகியோர் பேசினர்.

நிகழ்ச்சியில் பாரத் கல்வி குழுமத்தை சேர்ந்த விக்ரம் சூரிய பிரகாஷ். முதல்வர்கள், பேராசிரியர்கள், பேராசிரியை கள் கல்வி குழும உறுப்பினர்கள் மாணவ, மாணவிகள் கலந்து கொண்டனர். அனைவருக்கும் இப்தார் நோன்பு கஞ்சி வழங்கப்பட்டது.

# விழுப்புரம் மாவட்ட கலெக்டர் தலைமையில் ஆய்வுக்கூட்டம்





விழுப்புரம், ஏப். 10

விழுப்புரம் பெருந்திட்ட வளாகத்தில் உள்ள சுற்றுலா மாளிகையில், 2024நாடாளுமன்ற தேர்தல் முன்னிட்டு, 13.விழுப்புரம் (தனி) நாடாளுமன்ற தொகுதி தேர்தல் பணிகள் தொடர்பான செலவினங்கள் மற்றும் பறக்கும் படையினரால் கைப்பற்றப்பட்ட பொருட்கள் மற்றும் செலவினங்கள் குறித்து மாவட்ட தேர்தல் அலுவலர்/மாவட்ட கலெக்டர் சி.பழனி தலைமையில், சிறப்பு தேர்தல் செலவினப் பார்வையாளர் பி.ஆர். பாலகிருஷ்ணன், தேர்தல் பொதுப்பார்வையாளர் அகிலேஷ் குமார் மிஷ்ரா மற்றும் தேர்தல் செலவினப்பார்வையாளர் ராகுல் சிங்கானியா ஆகியோர் முன்னிலையில், ஆய்வுக்கூட்டம் நடைபெற்றது.

2024 நாடாளுமன்ற தேர்தல் முன்னிட்டு, விழுப்புரம் மாவட்டத்தில், தேர்தல் நன்னடத்தை விதிகள் முறையாக பின்பற்றிடும் பொருட்டு 13.விழுப்புரம் (தனி) நாடாளுமன்ற தொகுதி தேர்தல் பணிகள் தொடர்பாக அமைக்கப்பட்டு செயல்பட்டு வரும் பறக்கும் படை மற்றும் நிலை கண்காணிப்புக்குழுவின் விவரங்கள் குறித்து கேட்டறியப்பட்டது. மேலும், ஒவ்வொரு பறக்கும்படையினர் மற்றும் நிலை கண்காணிப்புக் குழுவினரால் நாள்தோறும் கைப்பற்றப்பட்ட பொருட்கள் மற்றும் ரொக்கப்பணங்கள் குறித்தும், எந்தவொரு ரொக்கப்பணமோ மற்றும் பொருட்களோ கைப்பற்றதா பறக்கும்படை மற்றும் நிலை கண்காணிப்பு குழுவினர் விவரங்கள் குறித்து விவாதிக்கப்பட்டது. தற்பொழுது வரை பறக்கும்படையினரால் கைப்பற்றப்பட்டு கருவுலத்தில் பாதுகாப்பாக வைக்கப்பட்டுள்ள ரொக்கப்பண விவரங்கள் குறித்து விவாதிக்கப்பட்டது.

மேலும், விழுப்புரம் மாவட்டத்தில், தேர்தல் அறிவிப்பு நாள் முதல் தற்பொழுது வரை வணிகர்களிடமிருந்து மொத்தமாக ஏதேனும் பொருட்கள் கொள்முதல் செய்யப்பட்டுள்ளதா அது தொடர்பான விவரங்கள் குறித்து கேட்டறியப்பட்டது. வங்கிகள் மூலமாக ரொக்கப்பணங்கள் எடுத்துச் செல்லப்பட்ட விவரங்கள் குறித்து கேட்டறிந்ததுடன், தொடர்ந்து கண்காணித்திட சம்மந்தப்பட்ட அலுவலர்களுக்கு அறிவுறுத்தப்பட்டது. இதுமட்டுமல்லாமல், வாக்குப்பதிவு நாள் நெருங்கி வரும் நிலையில், பறக்கும்படையினர் மற்றும் நிலை கண்காணிப்புகுழுவினரின் சோதனைப்பணிகளை தீவிரப்படுத்திட உரிய நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். மேலும், சுங்கச்சாவடி மற்றும் சோதனைச்சாவடிகளில் பறக்கும் படையினர் வாகன சோதனை மேற்கொள்ள ஏதுவாக தடுப்புக்கட்டை அமைத்துக்கொடுத்திட வேண்டும். மேலும், வாக்குப்பதிவு நடைபெறும் நாட்களுக்கு முந்தையநாள் கூடுதல் பணியாளர்களை நியமித்து, தொடர் கண்காணிப்பு பணிகளில் ரூடவ்டுபட நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்

சம்மந்தப்பட்ட அலுவலர்களுக்கு அறிவுறுத்தப்பட்டது என சிறப்பு தேர்தல் செலவினப்பார்வையாளர் பி.ஆர்.பாலகிருஷ்ணன், தெரிவித்தார்.

இக்கூட்டத்தில், மாவட்ட வருவாய் அலுவலர் மு.பரமேஸ்வரி, உதவி ஆணையர் (கலால்) முருகேசன், இணை ஆணையர் (புலனாய்வு) சுமித்ரா, மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (தேர்தல்) தமிழரசன், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (கணக்கு) ரமேஷ், ஊரக வளர்ச்சித்துறை கணக்கு அலுவலர் ஆனந்தன் உட்பட துறை சார்ந்த அலுவலர்கள் உடனிருந்தனர்.

# மயிலாடுதுறை மாவட்டத்தில் பாராளுமன்ற தொகுதி தேர்தல் ஆணையத்தின் தபால் வாக்கு வசதி: மாவட்ட கலெக்டர் தகவல்

மயிலாடுதுறை, ஏப். 10

மயிலாடுதுறை பாராளுமன்ற தொகுதியில் சீர்காழி சட்டமன்ற தொகுதியில் 1,22,727 ஆண் வாக்காளர்களும், 1,25,660 பெண் வாக்காளர்களும், 11 மூன்றாம் பாலினத்தவர்களும், மயிலாடுதுறை சட்டமன்ற தொகுதியில் 1,16,611 ஆண் வாக்காளர்களும், 1,18,948 பெண் வாக்காளர்களும், 10 மூன்றாம் பாலினத்தவர்களும், பும்புகார் சட்டமன்ற தொகுதியில் 133264 ஆண் வாக்காளர்களும், 137454 பெண் வாக்காளர்களும், 3 மூன்றாம் பாலினத்தவர்களும், திருவிடைமருதுர் சட்டமன்ற தொகுதியில் 129763 ஆண் வாக்காளர்களும், 132931 பெண் வாக்காளர்களும், 12 மூன்றாம் பாலினத்தவர்களும், கும்பகோணம் சட்டமன்ற தொகுதியில் 130162 ஆண் வாக்காளர்களும், 137298 பெண் வாக்காளர்களும், 15 மூன்றாம் பாலினத்தவர்களும், பாபநாசம் சட்டமன்ற தொகுதியில் 127410 ஆண் வாக்காளர்களும், 133268 பெண் வாக்காளர்களும், 21 மூன்றாம் பாலினத்தவர்களும் ஆக மொத்தம் 15,45,568 வாக்காளர்கள் உள்ளனர்.

இந்நிலையில், இந்திய தேர்தல் ஆணையத்தின் உத்தரவின்படி, பாராளுமன்ற பொதுத் தேர்தலில் 28.மயிலாடுதுறை பாராளுமன்ற தொகுதிக்கு உட்பட்ட 6 சட்டமன்ற தொகுதிகளில் வாக்குச்சாவடிக்கு நேரில் வந்து வாக்களிக்க இயலாத 85 வயதுக்கு மேற்பட்பட்ட மூத்த வாக்காளர்கள் மற்றும் மாற்றுத்திறனாளி வாக்காளர்கள் தபால் வாக்கு மூலம் வாக்குப் பதிவு செய்வதற்கான வசதிகள் நடைமுறைப் படுத் தப்பட்டன. இதனையொட்டி வாக்காளர்களின் இல்லங்களுக்கு சென்று தபால் வாக்குப்பதிவு பெற சட்டமன்ற தொகுதிகள் வாரியாக மொத்தம் 70 குழுக்கள் அமைக்கப்பட்டன.

இந்த குழுக்கள் கடந்த 05.04.2024, 06.04.2024 மற்றும் 08.04.2024 ஆகிய 3 நாட்கள் வரை மூத்த குடிமக்கள் மற்றும் மாற்றுத்திறனாளி வாக்காளர்களின் இருப்பிடத்திற்கு நேரில் சென்று தபால் வாக்கு படிவத்தை வழங்கி தபால் வாக்குகளை பெற்றுக்கொண்டனர்.

அதன்படி 28.மயிலாடுதுறை பாராளுமன்ற தொகுதியில் உள்ள சீர்காழி சட்டமன்ற தொகுதியில் 85 வயதிற்கு மேற்பட்ட 320 வாக்காளர்களும், 294 மாற்றுத்திறனுடைய வாக்காளர்களும், 161.மயிலாடுதுறை சட்டமன்ற தொகுதியில் 85 வயதிற்கு மேற்பட்ட 253 வாக்காளர்களும், 189 மாற்றுத்திறனுடைய வாக்காளர்களும், பும்புகார் சட்டமன்ற தொகுதியில் 85 வயதிற்கு மேற்பட்ட 283 வாக்காளர்களும், 178 மாற்றுத்திறனுடைய வாக்காளர்களும், திருவிடைமருதூர் சட்டமன்ற தொகுதியில் 85 வயதிற்கு மேற்பட்ட 297 வாக்காளர்களும், 121 மாற்றுத்திறனுடைய வாக்காளர்களும் , கும்பகோணம் சட்டமன்ற தொகுதியில் 85 வயதிற்கு மேற்பட்ட 374 வாக்காளர்களும், 176 மாற்றுத்திறனுடைய வாக்காளர்களும், 172.பாபநாசம் சட்டமன்ற தொகுதியில் 85 வயதிற்கு மேற்பட்ட 221 வாக்காளர்களும், 118 மாற்றுத்திறனுடைய வாக்காளர்களும் என மொத்தம் 2824 வாக்காளர்கள் தேர்தல் ஆணையத்தின் 85 வயதிற்கு மேற்பட்டவர்கள் மற்றும் மாற்றுத்திறனாளிகள் தபால் வாக்களிக்கும் முறையை பயன்படுத்தி தபால் வாக்கு செலுத்தி இத்தேர்தலில் தங்களது ஓட்டினை பதிவு செய்துள்ளனர் என மாவட்ட ஆட்சியர், மாவட்ட தேர்தல் அலுவலர் ஏ.பி.மகாபாரதி தெரிவித்துள்ளார்.

# தமிழககேரளா எல்லையில் உள்ள கண்ணகி கோவிலில் கேரளா அதிகாரிகள் ஆய்வு



கம்பம், ஏப். 10

தமிழக கேரளா எல்லையில் கூடலூர் மேற்கு தொடர்ச்சி மலையில் வண்ணாத்தி பாறையில் கற்புடை தெய்வம் கண்ணகி கோவில் அமைந்துள்ளது.

இங்கு ஆண்டு தோறும் சித்திரை முழு நிலவு நாளன்று திருவிழா நடைபெறும். இதற்காக தமிழக, கேரளா அதிகாரிகள் சார்பில் திருவிழா நடத்தப்படுவது குறித்து கூட்டம் நடத்தப்பட்டு முக்கிய முடிவுகள் எடுக்கப்படும்.

இந்நிலையில் இந்த ஆண்டு வரும் 23 ம் தேதி திருவிழா நடத்த முடிவு செய்யப்பட்டு இதற்காக தேக்கடியில் வரும் 13 ம் தேதி தேனி, இடுக்கி மாவட்ட ஆட்சியர்கள் தலைமையிலான கூட்டம் நடைபெற உள்ள நிலையில் தமிழக அதிகாரிகளுக்கு எவ்வித தகவலும் தெரிவிக்காமல் இடுக்கி மாவட்ட துணை ஆட்சியர் அருண் தலைமையில் கேரளா அதிகாரிகள் மட்டும் சென்று கண்ணகி கோவிலில் திடீர் ஆய்வு மேற்கொண்டதால் இதற்கு தமிழக விவசாயிகளும், பக்தர்களும் கடும் கண்டனம் தெரிவித்துள்ளனர்.




செங்கல்பட்டு மாவட்டம் குரோம்பேட்டை போத்தீஸ் ஜவுளி கடையில் நாடாளுமன்ற தேர்தல் 2024 இல் தேர்தலில் 100 சதவீதம் வாக்களிப்பதினை உறுதி செய்யும் வகையில் கிராமிய கலை நிகழ்ச்சிகளுடன் மகளிர் குழுக்களின் விளம்பர பதாகைகள் துண்டு பிரசுரங்கள் வழங்கி தேர்தல் விழிப்புணர்வு நிகழ்ச்சியினை மாவட்ட கலெக்டர் ச. அருண் ராஜ் தொடங்கி வைத்தார். உடன் மாவட்ட வருவாய் அலுவலர் சுபா நந்தினி, தாம்பரம் மாநகராட்சி ஆணையர் அழகு மீனா, உதவி ஆட்சியர் (பயிற்சி) ஆனந்த் குமார் சிங், மற்றும் பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

# தேர்தலை முன்னிட்டு தமிழகம் முழுவதும் 10,214 சிறப்பு பேருந்துகள் இயக்கம்

சென்னை, ஏப். 10

பாராளுமன்ற மக்களவை தேர்தல் வாக்குப்பதிவு தமிழகத்தில் ஒரே கட்டமாக வருகிற 19ந்தேதி நடைபெற இருக்கிறது. சொந்த ஊரில் இருந்து பலர் வெளியூரில் தங்கி வேலை பார்த்து வருகிறார்கள். இவர்கள் சொந்த ஊர் சென்று வாக்களிக்கவும், வாக்களித்த பின்னர் மீண்டும் வேலை செய்யும் இடத்திற்கு திரும்பவும் சிறப்பு பேருந்துகளை இயக்க தமிழக அரசு முடிவு செய்துள்ளது. அதன்படி சென்னையில் இருந்து 17 மற்றும் 18ந்தேதிகளில் 2,970 சிறப்பு பேருந்துகள் என 2 நாட்களுக்கு மொத்தம் 7154 பேருந்துகள் இயக்கப்படுகிறது. பிற ஊர்களில் இருந்து பல்வேறு இடங்களுக்கு 2 நாட்களுக்கு 3,060 பேருந்துகள் இயக்கப்பட இருக்கிறது.



ஏப்ரல் 20 மற்றும் 21ந்தேதிகளில் பிற ஊர்களில் இருந்து சென்னைக்கு திரும்பும் வகையில் 1825 சிறப்பு பேருந்துகள் என 2 நாட்களுக்கு மொத்தம் 6,009 பேருந்துகள் இயக்கப்படுகிறது.

அதேபோல் ஏப்ரல் 20 மற்றும் 21ல் பிற ஊர்களில் இருந்து பல்வேறு ஊர்களுக்கு திரும்ப 2,295 பேருந்துகள் இயக்கப்படுகிறது. மொத்தம் 10,214 சிறப்பு பேருந்துகள் இயக்கப்பட இருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

# சரியான போட்டி... கனிமொழியின் குற்றச்சாட்டும் தமிழிசையின் பதிலடியும்...

சென்னை, ஏப். 10

தென்சென்னை மக்களவை தொகுதியில் திமுக சார்பில் தமிழச்சி தங்க பாண்டியன் போட்டியிடுகிறார். பா.ஜனதா சார்பில் முன்னாள் ஆளுநர் தமிழிசை சவுந்தரராஜன் போட்டியிடுகிறார்.

இன்று தமிழச்சி தங்க பாண்டியன் எம்.பி.யை ஆ த ரி த் து திருவான்மியூரில் கனிமொழி எம்.பி. வாக்கு சேகரித்தார். அப்போது அவர் கூறியதாவது:

ஒரு மாநில கவர்னர் தனது பதவியை ராஜினாமா செய்துவிட்டு, இந்த தொகுதியில் (தென்சென்னை) போட்டியிடுகிறார். அந்த கட்சியில் (பா.ஜனதா) வேட்பாளர்கள் இல்லை. ஆகேவே இரண்டு மாநில கவர்னர்களை ராஜினாமா செய்ய வைத்து, தேர்தல் களத்தில் பா.ஜனதா களம் இறக்கி விட்டுள்ளது.



கடந்தமுறைதூத்துக்குடி தொகுதியில் இருந்து போட்டியிட்டார்.

ஆனால் தோல்வியடைந்த நிலையில் கவர்னர் ஆனார்.

இந்த முறை பரிதாபம், அவர் தோல்வியடைந்த பிறகு கவர்னர் ஆக முடியாது, ஏனென்றால் இந்தியா கூட்டணி ஆட்சி அமைக்க போகிறது. கச்சத்தீவு பிரச்சனை பற்றி பாராளுமன்றத்தில் பிரதமர் மோடி ஒருபோதும் பேசியது கிடையாது. தேர்தல் நெருங்கிய நிலையில், அவர்கள் அதைப் பற்றி பேசுகிறார்கள்" என்றார்.

அதற்கு பதில் அளிக்கும் விதமாக தமிழிசை சவுந்தராஜன் கூறியதாவது:

தயது செய்து உங்களுடைய எம்.பி. பதவியின் போது செய்த சாதனைகள் சொல்லுங்கள் என கனிமொழியிடம் கேட்க விரும்புகிறேன். நான் ஆளுநராக நீடிப்பதா? அல்லது வேட்பாளராக போட்டியிடுவதா? என்று நீங்கள் ஏன் கவலைப்படுகிறீர்கள். நீங்கள் பதட்டம் அடைகிறீர்கள்.

அவர்களுக்கு (திமுக) தேர்தலில் போட்டியிடக் கூடிய கட்சிக்காரர்கள் இல்லையா?. அவர்களுடைய சொந்த உறவினர்களுக்கு மட்டும் வாய்ப்பு வழங்கியுள்ளனர். எங்களுடைய கட்சியில் சாதாரண தொண்டனும் இந்த அளவிற்கு வளர்ச்சி அடைய முடியும்.

எங்களுடைய கட்சியில் வேட்பாளர் ஜனநாயக முறையில் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள். 15 பேர் விருப்ப மனு செய்திருந்தனர். அந்த 15 பேரில் நான் வேட்பாளராக தேர்வு செய்யப்பட்டுள்ளேன். திமுகவில் கனிமொழி மட்டுமே விருப்பமனு செய்திருந்தார்.

இவ்வாறு தமிழிசை சவுந்தரராஜன் தெரிவித்துள்ளார்.

# தமிழகத்தில் மூன்று நாட்கள் டாஸ்மாக் கடைகள் மூடல்

சென்னை, ஏப். 10

இந்தியாவில் மக்களவை தேர்தல் ஏப்ரல் 19ந்தேதி முதல் ஜூன் 1ந்தேதி வரை ஏழு கட்டங்களாக நடைபெற இருக்கிறது. தமிழகத்தில் உள்ள 39 தொகுதிகளுக்கும் வருகிற 19ந்தேதி ஒரே கட்டமாக தேர்தல் நடத்தப்பட இருக்கிறது. தமிழகத்தில் கட்சி தலைவர்கள் தற்போது தீவிர வாக்கு சேகரிப்பில் ஈடுபட்டு வருகிறார்கள். 19 ந்தேதி வாக்குப்பதிவு நடைபெற இருக்கும் நிலையில், 17ந்தேதி மாலை 5 மணியுடன் தேர்தல் பிரசாரம் முடிவடை யும்.

அதனால் தேர்தல் பிரசாரம் முடிவடையும் நாளில் இருந்து வாக்குப்பதிவு நடைபெறும் 19ந்தேதி வரை மூன்று நாட்கள் டாஸ்மாக் கடைகளை மூட வேண்டும் என தேர்தல் ஆணையம் அறிவுறுத்தியிருந்தது. அதனைத்தொடர்ந்து தமிழக அரசு மூன்று நாட்களை டாஸ்மாக் மூடப்படும் என அறிவித்துள்ளது. அத்துடன் வாக்கு எண்ணிக்கை நடைபெறும் ஜூன் 4ந்தேதியும் டாஸ்மாக் கடைகள் மூடப்படும் என அறிவித்துள்ளது.

# கச்சத்தீவை பற்றி 10 வருடங்களாக பேசாத பா.ஜ.க., தற்போது ஓட்டுக்காக பேசுகிறது: சீமான்

தருமபுரி, ஏப். 10

தருமபுரி பாராளுமன்ற தேர்தலில் போட்டியிடும் நாம் தமிழர் கட்சியின் வேட்பாளர் அபிநயா பொன்னி வளவனை ஆதரித்து இன்று தருமபுரி 4 ரோடு சந்திப்பில் அக்கட்சியின் தலைவர் சீமான் வாக்கு சேகரித்தார் அப்போது அவர் பேசியதாவது:



திராவிட கட்சிகள் சாதிவாரி கணக்கெடுப்பு நடத்தாது. பீகாரில் மாநில அரசின் சாதிவாரி கணக்கெடுப்பு நடத்தப்பட்டது. தமிழகத்தில் அது நடக்கவில்லை. தமிழகத்தில் சாதிவாரி கணக்கெடுப்பு தி.மு.க. அரசு நடத்தாது.

தி.மு.க.விற்கு நீங்கள் தொடர்ந்து வாக்களித்து இருந்தால் உங்கள் உரிமையை நீங்கள் இழக்கப்படுவீர்கள். நோயாளிகள் உருவாகாத ஒரு சமூக சமுதாயத்தை உருவாக்க நாம் தமிழர் கட்சிக்கு வாக்களிக்க வேண்டும். காவிரியில் தண்ணீர் கொடுக்க முடியாது என்று கூறிய காங்கிரசுக்கு தேர்தல் பிரச்சாரம் செய்தவர் மு.க.ஸ்டாலின். காவிரி நதி நீரை கொடுக்கவில்லை என்றால் தமிழகத்தில்பா.ஜ.க.,காங்கிரஸ் தோற்கடிக்கபடுவீர்கள் என்ற நிலை உருவாக வேண்டும்.

கடந்த 10 ஆண்டுகளாக பேசாத பாஜக தற்போது கச்சத்தீவை பற்றி பேசுவது ஏன் என கேள்வி எழுப்பினார்.

பா.ஜ.க. சிலிண்டர் விலை குறைப்பு தேர்தல் அரசியல் ஆகும்.

6 சட்டமன்ற தொகுதிக்கு ஒரு நாடாளுமன்றம் என்பதை மாற்றி 3 சட்டமன்றத் தொகுதிக்கு ஒரு நாடாளுமன்றம் என மாற்றப்பட வேண்டும். ஒரு அரசு அதிகாரி லஞ்சம் வாங்கிவிட்டால் நிரந்தர பணி நீக்கம் செய்ய வேண்டும். தற்காலிக பணி நீக்கம் செய்யக்கூடாது.

ஒரு வேட்பாளர் ஓட்டுக்கு பணம் கொடுத்து விட்டால் 10 ஆண்டுகளுக்கு தேர்தலில் நிற்க தடை விதிக்க வேண்டும். சீட்டுக்கும் நோட்டுக்கும் அலைவதைவிட்டுவிட்டு நாட்டுக்காக உழைக்கும் எங்களுக்கு வாக்களியுங்கள். இவ்வாறு அவர் பேசினார்.

பின்னர் பாட்டு பாடி வாக்கு சேகரிப்பில் ஈடுபட்டு சீமான் வாக்கு சேகரித்தார்.

# அவிநாசியில் தபால் வாக்கு செலுத்திய 94 வயது மூதாட்டி மரணம்

அவிநாசி, ஏப். 10

பாராளுமன்ற தேர்தலில் மாற்றுத்திறனாளிகள் மற்றும் வயது முதிர்ந்தவர்கள் வீட்டில் இருந்தபடியே வாக்களிக்கும் வகையில் தபால் வாக்குப்பதிவு வசதியை தேர்தல் ஆணையம் ஏற்படுத்தியுள்ளது.

இதையடுத்து திருப்பூர் மாவட்டத்தில் கடந்த 2 நாட்களாக மாற்றுத்திறனாளிகள், முதியவர்களின் வீடுகளுக்கு அதிகாரிகள் நேரில் சென்று தபால் வாக்குப்பதிவினை பெற்றனர்.

அவிநாசி பேரூராட்சிக்கு உட்பட்ட 13வது வார்டு கங்கவார் வீதியில் வசித்து வரும் வடிவேல் என்பவரின் மனைவி தாயம்மாள் (வயது 94) என்பவரது வீட்டிற்கும் நேற்று முன்தினம் அதிகாரிகள் சென்றனர். அதிகாரிகள் கொண்டு வந்த தபால் வாக்குப்பதிவு பெட்டியில் தாயம்மாள் தனது வாக்கினை செலுத்தினார்.

இந்நிலையில் நேற்று தாயம்மாள் திடீரென உடல்நலம் பாதிக்கப்பட்டு உயிரிழந்தார்.

வாழ்நாளின் இறுதிக்கட்டத்திலும் தனது ஜனநாயக கடமையை தாயம்மாள் செய்து முடித்தது நெகிழ்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

# த.மா.கா. துணைத்தலைவர் வேணுகோபால் மறைவு: ஜி.கே.வாசன் இரங்கல்

சென்னை, ஏப். 10

த.மா.கா. தலைவர் ஜி.கே.வாசன் வெளியிட்டுள்ள இரங்கல் செய்தியில் கூறி இருப்பதாவது:

தமிழக முன்னாள் சட்டமன்ற உறுப்பினர், தமிழ் மாநில காங்கிரஸ் மாநில துணைத்தலைவர் வேணுகோபால் என்கிற மாறன் உடல்நலக்குறைவால் காலமான செய்தி அறிந்து மிகவும் வருத்தம் அடைந்தேன். உடல்நிலை சரியில்லாத நிலையிலும் இயக்க உணர்வோடு த.மா.கா தலைமை அலுவலகத்திற்கு வந்து சில நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டார். அவரது மறைவு இயக்கத்திற்கு ஈடு செய்ய முடியாத இழப்பாகும். அவரை இழந்து வாடும் அவரது குடும்பத்தினருக்கு ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துக்கொள்கிறேன்.

இவ்வாறு அவர் கூறியுள்ளார்.

# செங்கோட்டை கிராமத்தில் ஜான்பாண்டியன் பலாப்பழம் சின்னத்திற்கு வாக்கு சேகரிப்பு

முதுகுளத்தூர், ஏப்.10

இராமநாதபுரம் மாவட்டம் முதுகுளத்தூர் அருகில் உள்ள செங்கோட்டை கிராமத்தில் முன்னாள் முதலமைச்சர் ஓ.பன்னீர் செல்வத்திற்கு பலாப்பழம் சின்னத்தில் வாக்கு சேகரித்தார். வரும் நாடாளுமன்ற தேர்தலில் பன்னீர் செல்வம் பலாப்பழம் சின்னத்தில் போட்டியிடுகிறார். முன்னாள் முதல்வர் பன்னீர்செல்வத்திற்கு வாக்கு சேகரிப்பின் போது ஜான்பாண்டியன் தேவேந்திர குல வேளாளர் சமூகத்திற்கு அதிகமான உதவிகளை செய்துள்ளார். அதே போல் நானும் பன்னீர்செல்வமும் முப்பது வருடங்களாக நண்பர்களாக இருக்கிறோம். சில அரசியல் கட்சியினர் தேவேந்திர குல வேளாளர் சமூகம் மற்றும் முக்குலத்தோர் சமுதாயத்தையும் தூண்டி விட்டு மோதலை ஏற்படுத்துகிறார்கள். ஆனால் இந்த இரு சமூகமும் இனி ஒற்றுமையாக இருந்து பலாப்பழம் சின்னத்தில் போட்டியிடும் முன்னாள் முதலமைச்சர் பன்னீர்செல்வத்தை வெற்றியடைய செய்ய வேண்டும். தென்காசியில் போட்டியிடும் எனக்கு பன்னீர் செல்வம் முக்குலத்தோர் வாக்குகளை எல்லாம் பெற்றுத் தருகின்றார். எனவே தேவேந்திர குல வேளாளர் மக்கள் அனைவரும் நானே இராமநாதபுரம் தொகுதியில் நிற்பதாக நினைத்து பலாப்பழம் சின்னத்திற்கு வாக்களிக்க வேண்டும் என்று உரையாற்றினார். ஜான்பாண்டியன் வாக்கு சேகரிப்பின் போது அம்மா மக்கள் முன்னேற்றக்கழகத்தின் மாவட்ட செயலாளர், முன்னாள் முதுகுளத்தூர் சட்டமன்ற உறுப்பினர் முருகன், பாரதிய ஜனதா கட்சியினர், கூட்டணி கட்சியினர் மற்றும் பொதுமக்கள் பலரும் கலந்துகொண்டனர்.



# மிளகாய்க்கு நியாயமான விலை நிர்ணயிக்கவில்லை: நூறுக்கும் மேற்பட்ட விவசாயிகள் சாலை மறியல்

ராமநாதபுரம், ஏப். 10

ராமநாதபுரம் அருகே மிளகாய்க்கு நியாயமான விலை நிர்ணயிக்கவில்லை எனக்கூறி நூறுக்கும் மேற்பட்ட விவசாயிகள் தேசிய நெடுஞ்சாலையில் சாலை மறியலில் ஈடுபட்டனர்.

ராமநாதபுரம் மாவட்டம் திருஉத்திரகோசமங்கை, களரி, மேலச்சீத்தை, செய்யாலூர், சிக்கல், தாளியரேந்தல், மட்டியரேந்தல் மற்றும் சுற்றுவட்டார விவசாயிகள் விளைவிக்கும் மிளகாய் வத்தல்களை எட்டிவயல் திருஉத்திரகோசமங்கை விலக்கு ரோடு அருகே உள்ள அரசு ஒழுங்குமுறை விற்பனை கூடத்தில் உள்ள மிளகாய் சந்தைக்கு கொண்டு வந்து விற்பனை செய்து வருகின்றனர். இந்நிலையில் கடந்த வாரம் வெள்ளி 10 கிலோ மிளகாய் ரூ. 1,800லிருந்து ரூ. 2,800 வரை விலை நிர்ணயிக்கப்பட்டது. ஆனால் நேற்று 10 கிலோ மிளகாய் ரூ.1100 லிருந்து ரூ.2,000க்கு விலை நிர்ணயிக்கப்பட்டது. இதனால் வியாபாரிகள் சிண்டிகேட் அமைத்து உரிய விலை நிர்ணயம் செய்யவில்லை எனக்கூறி, நூறுக்கும் மேற்பட்ட விவசாயிகள் மதுரை ராமேசுவரம் தேசிய நெடுஞ்சாலையில் சாலை மறியலில் ஈடுபட்டனர். அதனையடுத்து பரமக்குடி வட்டாட்சியர்கள் சாந்தி (பரமக்குடி), சுவாமிநாதன் (ராமநாதபுரம்), பரமக்குடி டிஎஸ்பி சபரிநாதன் ஆகியோர் விவசாயிகளிடம் பேச்சுவார்த்தை நடத்தினர்.


அப்போது இன்று காலை முறையாக ஏலம் விடப்பட்டு விவசாயிகளுக்கு உரிய விலை கிடைக்க ஏற்பாடு செய்யப்படும் என வேளாண் விற்பனைக் குழு செயலாளர் ராஜா மற்றும் வட்டாட்சியர் உள்ளிட்ட அதிகாரிகள் தெரிவித்தனர்.

பின்னர் அனைத்து விவசாயிகளும் கலைந்து சென்றனர். இதனால் ஒரு மணி நேரம் தேசிய நெடுஞ்சாலையில் போக்குவரத்து பாதிக்கப்பட்டது.



நாமக்கல் மாவட்ட தேர்தல் அலுவலர், கலெக்டர் உமா திருச்செங்கோடு வட்டம், எலையம்பாளையத்தில் உள்ள விவேகானந்தா பெண்கள் கல்லூரியில் வாக்கு எண்ணிக்கை நடைபெற உள்ள மையத்தினை பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

# அமைச்சர் துரைமுருகன் சொந்த கிராமத்தில் ரூ.7.5 லட்சம் பறிமுதல்



வேலூர், ஏப். 10

வேலூர் மாவட்டம் கே.வி.குப்பம் அருகே உள்ளது காங்குப்பம் கிராமம். இது அமைச்சர் துரைமுருகனின் சொந்த ஊர் ஆகும். இந்த கிராமத்தை சேர்ந்தவர் நடராஜன். விவசாயி.

வட்டிக்கு பணம் கொடுக்கும் தொழிலும் ஈடுபட்டு வருவதாக கூறப்படுகிறது. இவருடைய வீட்டில் வாக்காளர்களுக்கு பணம் சப்ளை செய்ய பணம் பதுக்கி வைத்திருப்பதாக பறக்கும் படையினருக்கு ரகசிய தகவல் கிடைத்தது. பறக்கும் படையினர் மற்றும் போலீசார் நேற்று இரவு அவரது வீட்டை சோதனையிட சென்றனர்.

இதனை அறிந்ததும் நடராஜன் மற்றும் அவரது குடும்பத்தினர் வீட்டை உள் பக்கமாக பூட்டி கொண்டனர். மேலும் வீட்டில் உள்ள அனைத்து மின் விளக்குகளையும் அணைத்துவிட்டனர்.

இது பற்றிய தகவலறிந்த கே.வி.குப்பம் தாசில்தார் சந்தோஷ், இன்ஸ்பெக்டர் ஆதர்ஷ் மற்றும் போலீசார் அங்கு வந்து வீட்டின் கதவை பலமுறை கைகளால் தட்டினர். உடனடியாக கதவை திறக்கும்படி கூறினர்.

ஆனாலும் நடராஜன் குடும்பத்தினர் கதவை திறக்கவே இல்லை. இது பற்றிய கே.வி.குப்பம் தாசில்தார் சந்தோஷ் உயர் அதிகாரிகளுக்கு தகவல் தெரிவித்தார்.

அதன்பேரில் உதவி தேர்தல் நடத்தும் அதிகாரிகள் மற்றும் குடியாத்தம் டி.எஸ்.பி. ரவிச்சந்திரன் உட்பட 100க்கும் அதிகமான போலீசார் அங்கு விரைந்து வந்தனர். வீட்டின் மொட்டை மாடி வழியாக சென்று கதவை உடைத்து வீட்டுக்குள் புகுந்தனர்.

மொட்டை மாடியில் கட்டு கட்டாக ரூ.2.5 லட்சம் மதிப்பிலான ரூபாய் நோட்டுகள் சிதறி கிடந்தன அவற்றை பறிமுதல் செய்தனர். வீட்டுக்குள் சென்று அதிரடியாக சோதனை நடத்தினர். அங்கு பதுக்கி வைத்திருந்தரூ.5லட்சம்பணத்தை பறிமுதல் செய்தனர்.

போலீசாரை கண்டதும் நடராஜன் மற்றும் அவருடைய மனைவி பதட்டமான நிலையில் காணப்பட்டனர். மேலும் எப்படி வீட்டுக்குள் வரலாம் என அதிகாரிடம் வாக்குவாதத்தில் ஈடுபட்டனர்.

ஆனாலும் அதிகாரிகள் அதைக் கண்டு கொள்ளாமல் தொடர்ந்து சோதனையில் ஈடுபட்டனர்.

நடராஜன் வீட்டில் பணம் பதுக்கியது யார்? என்பது குறித்து தீவிர விசாரணை நடத்தி வருகின்றனர். அமைச்சர் துரைமுருகன் சொந்த கிராமத்தில் பணம் பறிமுதல் செய்யப்பட்ட சம்பவம் அந்த பகுதியில் பரபரப்பை ஏற்படுத்தியது.

# தளபதி 69 ஆரவுக்கு காஸ்ட்லி கிஃப்ட் பரிசளித்த அஜித்



பிரபல நடிகர் அஜித்குமார் திரிஷா நடிக்கும் புதிய படம் 'விடாமுயற்சி' . இதனை இயக்குநர் மகிழ் திருமேனி இயக்குகிறார்.

இப்படத்தில் வில்லனாக ஆக்ஷன்கிங் அர்ஜுன் மற்றும் ஆரவ் நடிக்கின்றனர். மேலும் நடிகை ரெஜினா கசெண்ட்ரா நடிக்கிறார். இப்படத்தை 'லைகா' நிறுவனம் சார்பில் சுபாஸ்கரன் தயாரிக்கிறார். அனிருத் இசையமைக்கிறார்.

இதன் படப்பிடிப்பு கடந்த ஆண்டு அக்டோபர் மாதம் அஜர்பைஜானில் தொடங்கியது. படப்பிடிப்பின் போது ஆரவ் எடுத்த அஜித் குமாரின் புகைப்படம் இன்ஸ்டாகிராமில் வைரலானது.

அஜித் குமார் அவர்களின் நண்பர்களோடு பைக் டூர் செல்லும் பழக்கம் உடையவர். சமீபத்தில் அவர் மீண்டும் நண்பர்களுடன் பைக் டிரிப் சென்றார். அதில் நடிகர் ஆரவும் உடனிருந்தார். அந்த டிரிப்பில் அஜித் தனது நண்பர்களுக்கு பிரியாணி சமைத்து தரும் வீடியோ டிரெண்டிங் ஆனது.

கடந்த வாரம் விடாமுயற்சி படப்பிடிப்பின் போது எடுக்கப்பட்ட ஸ்டண்ட் காட்சி ஒன்றின் வீடியோவை படக்குழு வெளியிட்டது. விடாமுயற்சி படப்பிடிப்பில் இருந்து அஜித்குமாரும் ஆரவும் மிக நல்ல நண்பர்களாக இருக்கின்றனர்.

இந்நிலையில் அஜித் குமார் ஆரவுக்கு ரூ. 35 லட்சம் மதிப்பிளான ரேசிங் பைக்கை பரிசளித்துள்ளார் என்று தகவல் வெளியாகியுள்ளது. இருவரும் விடாமுயற்சி படத்தின் இறுதிக்கட்ட படப்பிடிப்பில் நடித்து வருகின்றனர் என்பது குறிப்படத்தக்கது.

# யூ டியூபில் வைரலாகும் கவினின் விண்டேஜ் லவ்




மணிகண்டன் இயக்கத்தில் 2023 ஆம் ஆண்டு வெளிவந்த டாடா படத்தில் கவின் நடித்து இருந்தார். அபர்னா தாஸ், பாக்யராஜ், ஐஷ்வர்யா, விடிவி கணேஷ் போன்ற முன்னணி கதாப்பாத்திரங்களும் நடித்து இருந்தனர். இந்த படம் மக்களிடயே மிகப் பெரிய வரவேற்பை பெற்றது,

கவின் அடுத்ததாக ஸ்டார் மற்றும் கிஸ் படங்களில் நடித்து வருகிறார்.

இளன் இயக்கத்தில் யுவன் ஷங்கர் ராஜா இசையில் ஸ்டார் படம் உருவாகியுள்ளது. இளன் இதற்கு முன் ஹரிஷ் கல்யாண் நடிப்பில் வெளிவந்த 'பியார் பிரேமா காதல்' படத்தை இயக்கி இருப்பது குறிப்பிடத்தக்கது.

கவின், லால், கீதா கைலாசம், அதிதி பொஹங்கர், ப்ரீத்தி முகுந்தன் ஆகியோர் முன்னணி கதாப்பாத்திரத்தில் நடித்துள்ளனர்.

இப்படத்தின் முதல் பாடல் சென்ற மாதம் வெளியானது. அடுத்ததாக இப்படத்தின் இரண்டாம் பாடலான "விண்டேஜ் லவ்" பாடல் வீடியோ 4 நாட்களுக்கு முன் வெளியானது. பாடலாசிரியர் கபிலன் இப்பாடலிற்கு பாடல் வரிகளை எழுதியுள்ளார். இப்பாடலின் வீடியோ இதுவரை 15 லட்ச மக்களால் பார்க்கப்பட்டு இருக்கிறது. யூடியூபில் மியூசிக்கில் டிரெண்டிங் நம்பர் ஒன்றாக இடம் பெற்றுள்ளது.

இதில் கவின் ஒரு கல்லூரியில் நடக்கும் நிகழ்ச்சியில் காதலியைப் பார்த்து பாடுவதாக காட்சிகள் அமைந்து இருக்கிறது. இப்பாடலின் காட்சிகள் சமூக வலைத்தளங்களில் ரசிகர்களால் பகிரப்பட்டு வருகிறது.

# வரலட்சுமி சரத்குமாரின் புதிய படம்




விக்னேஷ் சிவன் இயக்கத்தில் சிம்பு நடிப்பில் 2012 ஆம் ஆண்டு வெளியான போடா போடி படத்தின் மூலம் தமிழ் சினிமாவில் கதாநாயகியாக அறிமுகமானார் வரலக்ஷ்மி சரத்குமார்.

இதை தொடர்ந்து பாலா இயக்கத்தில் தாரை தப்பட்டை படத்தில் நடித்தார். இப்படத்தின் மூலம் வரலகட்சுமிக்கு பெரிய அங்கீகாரம் கிடைத்தது. இதைத் தொடர்ந்து சண்டகோழி 2, சர்கார், மாரி 2, வெல்வட் நகரம், இரவின் நிழல், வீரா சிம்ஹா ரெட்டி போன்ற போன்ற படங்களில் முக்கிய கதாப்பாத்திரத்தில் நடித்தார்.

தமிழ் மட்டுமல்லாமல் தெலுங்கு, மலையாளம், கன்னடம், இந்தி மொழிப் படங்களிலும் வரலக்ஷ்மி நடித்து வருகிறார். இதைத் தொடர்ந்து வரலட்சுமி அடுத்ததாக சபரி என்ற படத்தில் நடித்துள்ளார். அறிமுக இயக்குநரான அனில் இப்படத்தை இயக்கியுள்ளார்.

கோபி சுந்தர் இந்த படத்திற்கு இசையமைத்துள்ளார். கணேஷ் வெங்கட்ராம், மது நந்தன் ஆகியோர் இப்படத்தில் முக்கிய கதாப்பாத்திரத்தில் நடித்துள்ளனர். வரும் மே மாதம் 3 ஆம் தேதி இப்படம் வெளியாகவுள்ளது

# பிரசாந்துக்கு தந்தை கொடுத்த விலை உயர்ந்த பரிசு



பிரபல இயக்குனர் தியாகராஜனின் மகன் பிரசாந்த். 1990 ஆண்டு 'வைகாசி பொறந்தாச்சு' படம் மூலம் நடிகரானார். அதை தொடர்ந்து பிரபல இயக்குனர் பாலுமகேந்திரா இயக்கத்தில் 'வண்ண வண்ண பூக்கள்' படத்தில் நடித்தார்.

அதன்பின் முக்கிய இயக்குனர்களான மணிரத்னம், ஷங்கர் இயக்கிய படங்களில் நடித்தார். இதில் செம்பருத்தி, திருடா திருடா, ஜீன்ஸ், ஜோடி, கண்ணெதிரே தோன்றினால், வின்னர் போன்ற படங்கள் பிரசாந்துக்கு பெரும் பெயரை பெற்று தந்த வெற்றி படங்களாக அமைந்தன.

இந்நிலையில் நடிகர் பிரசாந்த் தனது 51 வது பிறந்தநாள் சென்னை ஆழ்வார்பேட்டையில் உள்ள வீட்டில் எளிமையாக கொண்டாடினார். அப்போது தந்தை தியாகராஜன் பிரசாந்த்துக்கு பிறந்த நாள் பரிசு வழங்கி இன்ப அதிர்ச்சி கொடுத்து உள்ளார்.

மகன் மீது அளவற்ற பாசம் கொண்ட தியாகராஜன் விலை உயர்ந்த வெள்ளை நிற BMW X7 சீரிஸ் சொகுசு காரை பரிசாக வழங்கினார். அதன் மதிப்பு ரூ.1.6 கோடியாகும்.

தற்போது வெங்கட் பிரபு இயக்கி வரும் "GOAT" படத்தில் விஜய்யுடன் இணைந்து முக்கிய வேடத்தில் பிரசாந்த் நடித்து வருகிறார்.

# இப்படிதான் என்னுடைய நாள் தொடங்குகிறது வெங்கட் பிரபுவின் பரிதாபங்கள்




லியோ வெற்றியை அடுத்து வெங்கட் பிரபு இயக்கத்தில் "தி கிரேட்டஸ்ட் ஆஃப் ஆல் டைம்" என்ற படத்தில் நடிகர் விஜய் நடித்து வருகிறார். ஏ.ஜி.எஸ். நிறுவனம் இப்படத்தை தயாரிக்கிறது. யுவன் ஷங்கர் ராஜா இப்படத்திற்கு இசையமைத்துள்ளார்.

சமீபத்தில் கோட் படத்தின் படப்பிடிப்பு கேரளாவின் திருவனந்தபுரத்தில் நடைபெற்றது. கேரள ரசிகர்களின் வரவேற்பு மிக பிரம்மிப்பாக இருந்தது. பின் நான்கு நாட்கள் படப்பிடிப்பு முடித்தவுடன் சென்னை திரும்பினார் விஜய். இந்நிலையில் தற்பொழுது கோட் படத்தின் அடுத்தக்கட்ட படப்பிடிப்பு ரஷ்ய தலைநகரான மாஸ்கோவில் நடைப்பெற்று வருகிறது. இதையொட்டி வெங்கட் பிரபு நகைச்சுவையாக ஒரு பதிவொன்றை இன்ஸ்டாகிராமில் பதிவிட்டுள்ளார்.

அப்பதிவில் கோட் படத்தின் தயாரிப்பாளரான அர்ச்சனா கல்பாத்தி மற்றும் ஐஷ்வர்யா கல்பாத்தி இருவரும் வெங்கட் பிரபுவை கேள்வி கேட்குமாறு கை சைகையில் இருக்கிறார்கள். வெங்கட் பிரபு தலையில் பேஸ்பால் பேட் ஒன்றை அர்ச்சனா கல்பாத்தி வைத்துள்ளார். வெங்கட் பிரபு இருவரையும் கையெடுத்து கும்பிடுகிறார். இவ்வாறு அந்த காட்சி அமைந்துள்ளது. இப்படித்தான் என்னுடைய நாள் 'என் அன்பு தயாரிப்பாளர்களுடன் தொடங்கும்' என நகைச்சுவையான தலைப்பில் இன்ஸ்டாகிராமில் பதிவிட்டுள்ளார்.

# காயம் காரணமாக டெல்லியுடனான போட்டியில் இருந்து மயங்க் யாதவ் விலகல்



ஐ.பி.எல். 2024 தொடரில் லக்னோ அணிக்காக களமிறங்கிய வேகப்பந்து வீச்சாளர் மயங்க் யாதவ். இளம் வேகப்பந்து வீச்சாளரான மயங்க் யாதவ் தனது அபாரமான பந்துவீச்சு காரணமாக பிரபலமாகியுள்ளார்.

இந்த நிலையில் காயம் காரணமாக மயங்க் யாதவ் டெல்லி கேப்பிட்டல்ஸ் அணிக்கு எதிராக ஏப்ரல் 12 ஆம் தேதி நடைபெற இருக்கும் போட்டியில் களமிறங்க மாட்டார் என்று லக்னோ அணியின் தலைமை செயல் அதிகாரி தெரிவித்துள்ளார்.

அடிவயிற்று பகுதியில் ஏற்பட்ட காயம் காரணமாக ஒருவார காலம் மருத்துவ மேற்பார்வையில் இருக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளதால் மயங்க் யாதவ் லக்னோ அணி விளையாட உள்ள அடுத்த போட்டியில் விளையாட மாட்டார் என்று அறிவிக்கப்பட்டு இருக்கிறது.

முன்னதாக குஜராத் டைட்டன்ஸ் அணிக்கு எதிரான போட்டியில் சிறப்பாக பந்துவீசிய மயங்க் யாதவ் லக்னோ அணி வெற்றி பெற முக்கிய காரணமாக விளங்கினார்.

# ஜடேஜா, தேஷ்பாண்டே அபார பந்து வீச்சு: சிஎஸ்கேவுக்கு 138 ரன்கள் வெற்றி இலக்கு நிர்ணயித்தது கொல்கத்தா



சென்னை சேப்பாக்கம் மைதானத்தில் நடைபெற்று வரும் ஆட்டத்தில் சென்னை சூப்பர் கிங்ஸ் கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணிகள் பலப்பரீட்சை நடத்தி வருகின்றன. டாஸ் வென்ற சென்னை சூப்பர் கிங்ஸ் பந்து வீச்சை தேர்வு செய்தது.

அதன்படி கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணியின் பிலிப் சால்ட், சுனில் நரைன் ஆகியோர் தொடக்க வீரர்களாக களம் இறங்கினர். முதல் ஓவரை தேஷ்பாண்டே வீசினார். முதல் பந்திலேயே சால்ட் ரன் ஏதும் எடுக்காமல் ஆட்டமிழந்தார்.

அடுத்து சுனில் நரைன் உடன் இளம் வீரர் அங்கிரிஷ் ரகுவன்ஷி களம் இறங்கினார். முதல் ஓவரில் கொல்கத்தா ஒரு ரன் மட்டுமே எடுத்தது. 2வது ஓவரில் ஒரு பவுண்டரியுடன் 6 ரன்கள் அடித்தது.

தேஷ்பாண்டே வீசிய 3வது ஓவரில் 19 ரன்கள் விளாசியது. 4வது ஓவரில் 11 ரன்கள் கிடைத்தது. 5வது ஓவரில் 13 ரன்கள் கிடைக்க கொல்கத்தா நைட் ரைடர்ஸ் 5 ஓவரில் 50 ரன்கள் குவித்தது. இதனால் கொல்கத்தா நைட் ரைடர்ஸ் 200 ரன்கள் குவிக்கும் என எதிர்பார்க்கப்பட்டது. 7வது ஓவரை ஜடேஜா வீசினார். இந்த ஓவரில் ஜடேஜா திருப்புமுனை ஏற்படுத்தினார். முதல் பந்திலேயே ரகுவன்ஷியை எல்.பி.டபிள்யூ மூலம் வீழ்த்தினார். ரகுவன்ஷி 18 பந்தில் 24 ரன்கள் எடுத்து ஆட்டமிழந்தார். இதே ஓவரின் 5வது பந்தில் சுனில் நரைனை வீழ்த்தினார். அவர் 20 பந்தில் 27 ரன்கள் எடுத்து தீக்சனாவிடம் கேட்ச் கொடுத்து ஆட்டமிழந்தார். அதன்பின் கொல்கத்தா நைட் ரைடஸ் ரன்கள் அடிக்க திணறியது. ஜடேஜா மேலும் வெங்களடேஷ் அய்வரை 3 ரன்னில் வீழ்த்தினார். கொல்கத்தா நைட் ரைடர் 15.1 ஓவரில் 100 ரன்னைத் தொட்டது.

இதனால் 200 ரன்களை தொடும் என எதிர்பார்க்கப்பட்ட நிலையில், 150 ரன்னைத் தாண்டுமா? என்ற நிலை ஏற்பட்டது. ரிங்கு பாண்டு கடைசி நேரத்தில் அதிரடி காட்டுவார் என எதிர்பார்க்கப்பட்ட நிலையில் 14 பந்தில் 9 ரன்கள் எடுத்து ஆட்டமிழந்தார். 16.5வது ஓவரில் அந்த்ரே ரஸல் களம் இறங்கினார். 18வது ஓவரை முஸ்தாபிஜுர் ரஹ்மான் வீசினார். இந்த ஓவரில் ஒரு பவுண்டரி மட்டுமே விட்டுக்கொடுத்தார்.

கொல்கத்தா அணியால் இந்த ஓவரில் 9 ரன்கள் மட்டுமே அடிக்க முடிந்தது. நோபால் பந்துடன் சேர்த்து ரஸல் 6 பந்துகளை சந்தித்தது குறிப்பிடத்தக்கது. 19வது ஓவரை தேஷ்பாண்டே வீசினார். இந்த ஓவரின் 2வது பந்தில் அந்த்ரே ரஸல் ஆட்டமிழந்தார். கொல்கத்தா அணிக்கு இந்த ஓவரில் 13 ரன் கிடைத்தது. 135 ரன்கள் எடுத்த நிலையில் முஸ்தாபிஜூர் ரஹ்மான் வீசிய கடைசி ஓவரை கொல்கத்தா எதிர்கொண்டது. முதல் பந்தில் ஷ்ரேயாஸ் அய்யர் ஆட்டமிழந்தார். இந்த ஓவரில் 2 ரன்கள் மட்டுமே சேர்க்க கொல்கத்தா நைட் ரைடர்ஸ் 20 ஓவரில் 9 விக்கெட் இழப்பிற்கு 137 ரன்கள் எடுத்துள்ளது. முஸ்தாபிஜூர் ரஹ்மான் 4 ஓவரில் 22 ரன்கள் விட்டுக்கொடுத்து 2 விக்கெட் வீழ்த்தினார்.

# மொராக்கோ ஓபன்: சாம்பியன் பட்டம் வென்றார் பெரெட்டினி



வட ஆப்பிரிக்காவில் அமைந்துள்ள மொராக்கோவில் கிராண்ட் பிரிக்ஸ் ஹசன் டென்னிஸ் தொடர் நடந்து வருகிறது.

இதில் ஆண்கள் ஒற்றையர் பிரிவில் நடந்த இறுதிப்போட்டியில் இத்தாலியின் மேட்டியோ பெரெட்டினி, ஸ்பெயின் வீரர் ராபர்டோவுடன் மோதினார்.

இதில் பெரெட்டினி 75, 62 என்ற நேர் செட்களில் எளிதில் வென்று சாம்பியன் பட்டம் வென்றார்.

# அரை சதம் விளாசிய ருதுராஜ் 7 விக்கெட் வித்தியாசத்தில் கொல்கத்தாவை வீழ்த்தியது சிஎஸ்கே



ஐபிஎல் தொடரின் 22வது லீக் ஆட்டத்தில் நடப்பு சாம்பியன் சென்னை சூப்பர் கிங்சும், முன்னாள் சாம்பியன் கொல்கத்தா நைட் ரைடர்சும் அணியும் மோதுகிறது. இதில் டாஸ் வென்ற சென்னை கொல்கத்தா அணி பந்து வீச்சை தேர்வு செய்தது.

அதன்படி களமிறங்கிய கொல்கத்தா அணியில் சால்ட் முதல் பந்தில் ஆட்டமிழந்து ஏமாற்றம் அளித்தார். இருந்தாலும் அதன்பிறகு சுனில் நரைன் அங்கிரிஷ் ரகுவன்ஷி அதிரடியாக விளையாடி ரன்களை சேர்த்தனர். இந்த ஜோடி 2வது விக்கெட்டுக்கு 56 ரன்கள் சேர்த்தது. அதனை தொடர்ந்து வந்த வீரர்கள் தடுமாற்றத்துடன் விளையாடினர். இதனால் 20 ஓவர் முடிவில் கொல்கத்தா அணி 9 விக்கெட்டுகளை இழந்து 137 ரன்கள் மட்டுமே எடுத்தது. சிஎஸ்கே தரப்பில் ஜடேஜா, தேஷ்பாண்டே ஆகியோர் தலா 3 விக்கெட்டுகளை கைப்பற்றினர்.

இதனை தொடர்ந்து சிஎஸ்கே அணியின் தொடக்க வீரர்களாக ரச்சின் ரவீந்திரா ருதுராஜ் களமிறங்கினர். ரச்சின் 15 ரன்னில் ஆட்டமிழந்தார். அடுத்து வந்த மிட்செல் ருதுராஜ் உடன் ஜோடி சேர்ந்து நிதானமாக விளையாடி ரன்களை சேர்த்தனர். பொறுப்புடன் விளையாடிய ருதுராஜ், சிஎஸ்கே அணியின் கேப்டனாக தனது முதல் அரை சதத்தை பதிவு செய்தார்.

நிதானமாக விளையாடிய மிட்செல் 25 ரன்னில் ஆட்டமிழந்தார். அடுத்து வந்த துபே அவரது பாணியில் அதிரடியாக விளையாடினார். அவர் 28 ரன்னில் அவுட் ஆனார். அடுத்ததாக ரசிகர்கள் ஆவலுடன் எதிர்பார்த்த டோனி களமிறங்கினார். ஆனால் சிக்சர் அடிப்பார் என எதிர்பார்க்கப்பட்ட நிலையில் 1 ரன்கள் மட்டுமே எடுத்தார்.

இறுதியில் சென்னை சூப்பர் கிங்ஸ் 17.4 ஓவரில் 3 விக்கெட்டுகளை இழந்து 141 ரன்கள் எடுத்து வெற்றி பெற்றது. கொல்கத்தா அணி தரப்பில் வைபவ் அரோரா 2 விக்கெட்டும், சுனில் நைரன், வருண் சக்கரவர்த்தி தலா 1 விக்கெட்டுகளை வீழ்த்தினர்.



**அடக்கம் அமரருள் உய்க்கும் அடங்காமை**
**ஆரிருள் உய்த்து விடும்**

**விளக்கம்:**

**அடக்கம் ஒருவனை உயர்த்தித் தேவருள் சேர்க்கும்; அடக்கம் இல்லாதிருத்தல், பொல்லாத இருள் போன்ற தீய வாழ்க்கையில் செலுத்தி விடும்.**

நமது தினகனி
செய்திகள் மற்றும் விளம்பரங்கள் தொடர்புக்கு:
94436 99066

Printed by KANIRAJA V. published by KANIRAJA V. on behalf of NAMADHU DHINA KANI TAMIL DAILY and printed at SEAMAN GRAPHICS No. 7/253, KVN puram 2 2nd street, KilpaukGarden, Chennai 600010. and published at No.28, Thalikattipalayam, Kaithamalai Road, Uttukuli, Tiruppur - 63815.1. Editor: KANI RAJA V.